19.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தொடர் மழையால் அருவிகளில் நீர்வரத்து

கொடைக்கானலில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் அருவிகளில் நீர்வரத்து தொடங்கியுள்ளது.

கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் வெள்ளி நீர்வீழ்ச்சி, பாம்பார் அருவி, பியர்சோழா அருவி, வெட்டு வரை அருவி, எலிவால் அருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் வரத்து தொடங்கியுள்ளது. இதனால் கேரட், உருளைக்கிழங்கு, பீட்ரூட், முட்டைக்கோஸ் உள்ளிட்ட மலைக் காய்கறிகளை விவசாயம் செய்து வரும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பசுமை சுற்றுலா மேம்பாடு: மேல்மலைக் கிராமமான மன்னவனூர் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவித்து அங்குள்ள ஏரியை பார்க்க வனத்துறையினர் அனுமதியளிதுள்ளனர். பசுமை (எக்கோ) சுற்றுலாவாக சுற்றுலாப் பயணிகள் மன்னவனூரில் உள்ள ஆடு வளர்ப்புப் பண்ணை, பசுமைக் குடில்களை பார்வையிட்டு, ஏரியிலும் பரிசலில் சென்று மகிழ்கின்றனர்.

மேலும் வனத்துறையினர் மூலம் இயற்கைக் காட்சிகளை பார்ப்பதற்கு டிரக்கிங் சென்று வருகின்றனர். ஆனால், மன்னவனூர் ஏரியில் இயக்கப்படும் பரிசலில் அளவுக்கு அதிகமாகவும் பலர் பாதுகாப்பு கவசம் அணியாமலும் செல்கின்றனர். இது ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் உள்ளது.

இது குறித்து வனத்துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பாதுகாப்புக் கவசம் கூடுதலாக வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## குன்னூரில் பலத்த மழை

குன்னூர், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் திங்கள்கிழமை காற்றுடன் பலத்த மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழச்சி அடைந்துள்ளனர்.

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாள்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது மூடுபனியும் உருவானது. இந்நிலையில், கடந்த இரண்டு நாள்களாக திடீரென பெய்யத் துவங்கிய மழை சில மணிநேரம் நீடித்தது. குன்னூரில் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்துவரும் நிலையில், ரேலியா மற்றும் ஈளடா அணைப் பகுதிகளிலும் மழை பெய்துவருவதால் இந்த அணைகளின் நீர்மட்டம் கணிசமான அளவு உயரும் வாய்ப்பு உள்ளது.

## நீலகிரியில் மூன்றாவது நாளாகப் பரவலாக மழை: கேத்தியில் 54 மி.மீ. பதிவு

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து மூன்றாவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் பரவலாக மழை பெய்துள்ளது.

மாவட்டத்தில், தென்மேற்குப் பருவ மழை வலுத்துவரும் சூழலில், தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் மழை பெய்தது.

இதனால், பொதுமக்கள், விவசாயிகள் உள்ளிட்டோர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பதிவான மழை விபரம் (மி.மீ.): கேத்தி-54, எமரால்டு-35, உதகை-17.3, நடுவட்டம்-16.4, கொடநாடு-12, குன்னூர்-8.5, கோத்தகிரி-6.5, தேவாலா மற்றும் குந்தா தலா 6, கிளன்மார்கன் மற்றும் கல்லட்டி தலா 4, கெத்தை-3, அவலாஞ்சி மற்றும் கூடலூர் தலா 2, கிண்ணக்கொரை-1 மி.மீ.

## கல்லணையில் 19.4 மி.மீ. மழை

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக கல்லணையில் 19.4 மி.மீ. மழை பெய்தது. மாவட்டத்தில் சில இடங்களில் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): கல்லணை 19.4, அதிராம்பட்டினம் 17, திருக்காட்டுப்பள்ளி 10.8, குருங்குளம் 5, ஒரத்தநாடு 3.2, மதுக்கூர் 2.6, வெட்டிக்காடு 2.2, பூதலூர் 1.2.

## வேதாரண்யம் பகுதியில் வீணாகும் கொம்புடிப் பழங்கள்

நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் கொம்புடி என அழைக்கப்படும் நாட்டு தர்ப்பூசணிப் பழங்களின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு மக்களிடையே குறைந்து வருவதால், விளைவித்த வயல்களிலேயே பழங்கள் வீணாகி வருவது வேதனையளிக்கிறது.

தர்பூசணி பழங்கள் போன்று காணப்படும் கொம்புடிப் பழம், கொமுட்டி, கும்புடி என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. தர்ப்பூசணியை போன்றே கொம்புடியும் இலை, கொடி, பூ, காய், பழம், விதை என அனைத்தும் ஒரே மாதிரியாக இருக்கும். இதனை எளிதாக அடையாளப்படுத்த நாட்டு தர்ப்பூசணி எனவும் அழைக்கின்றனர். கொம்புடியின் தன்மையும், அதன் மருத்துவ குணம், பயன்பாடு அனைத்துமே தர்ப்பூசணியைவிடவும் பல மடங்கு அதிகமானது என்பது பலருக்கும் தெரியாது.

உடலுக்கு குளிர்ச்சியை தரும் தர்ப்பூசணிப் பழங்கள் நகரப் பகுதி சந்தைகளில் அதிகமாகக் கிடைப்பதால் அவை பெரும்பாலான மக்களுக்கு அறிமுகமாகிவிட்டது.

கொம்புடிப் பழங்கள்:

கொம்புடிப் பழம் மருத்துவ குணம் மிகுந்தவை. மஞ்சள்காமாலை நோய் வராமல் தடுக்கவும், அதனை குணமாக்கவும் சிறந்த மருந்தாகும். இதன் காய்களை கறி சமைத்து சாப்பிடலாம். இதன் பிஞ்சு, காய்களை கீற்றுகளாக வெட்டி பச்சரிசி, பருப்பு சேர்த்து தயாரித்த கஞ்சி வயிற்றுப்புண்ணை குணமாக்கும். உடல் வெப்பத்தை குறைக்கும்.

தர்ப்பூசணிக்கு உள்ள சந்தை வாய்ப்பு இந்த பழங்களுக்கு இல்லை. கிராமப்புறங்களில் கூட இதன் பயன்கள் குறித்த விழிப்புணர்வு தற்போது குறைந்து வருவதால், இந்த பழங்களை சாப்பிடுபவர்களின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது.

மானாவாரி நிலங்களை அதிகமாகக் கொண்டுள்ள வேதாரண்யம் பகுதியில், நெல் அறுவடை செய்யப்பட்ட தரிசு வயல்களில் எள், பயறு வகை பயிர்களோடு ஊடு பயிராக கொம்புடி சாகுபடி செய்வது வழக்கம்.

நிகழாண்டிலும், வழக்கம்போல விளைந்திருந்தாலும் சந்தை வாய்ப்பு இல்லாமல் விளைவித்த வயல்களிலேயே வீணாகி வருவது வேதனையளிக்கிறது. இதன்

பயன்களையும், சந்தை வாய்ப்புகளையும் தோட்டக்கலைத்துறை மூலம் மக்களிடையே கொண்டு செல்ல அரசு முயற்சிக்க வேண்டும் என்கின்றனர் இயற்கை ஆர்வலர்கள்.

## "இயந்திர நடவு பயன்பாட்டை கைவிட வேண்டும்'

டெல்டா மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை பாதிக்கும் வகையில் உள்ள இயந்திர நடவு பயன்பாட்டை கைவிட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பு அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஏ. லாசர் கூறினார்.

நாகப்பட்டினத்தில் செய்தியாளர்களுக்கு திங்கள்கிழமை மாலை அவர் அளித்த பேட்டி:

நாகை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், மேமாத்தூரில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலை மட்டுமே நம்பி உள்ளனர். இந்நிலையில், இயந்திரம் வைத்து நடவு செய்பவர்களுக்கு மானியம் வழங்கப்படுவதால், விவசாயிகள் அனைவரும் இயந்திர நடவில் ஆர்வம் செலுத்துகின்றனர். இதனால் விவசாயத் தொழிலை மட்டுமே நம்பியுள்ள விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்படுகிறது.

மேமாத்தூர் தொழிலாளர்களின் பாதிப்பு குறித்து மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளோம்.

டெல்டா மாவட்டங்களில் 15 லட்சம் பேர் உள்பட 90 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் தமிழகத்தில் உள்ளனர். விவசாய வேலைகளை மட்டுமே நம்பியுள்ள இவர்களுக்கு, மாறிவரும் விவசாயத் தன்மையால் விவசாயத்தில் கிடைக்கும் வேலை நாள்கள் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

மாற்று வேலைத் திட்டமாகக் கொண்டுவரப்பட்ட 100 நாள் வேலைத் திட்டமும் தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் சரிவர அமல்படுத்தப்படாததால், குறைந்த நாள்கள் வேலையும், குறைந்த ஊதியமும் கிடைக்கிறது.

டெல்டா மாவட்டங்களில் குறுவை சிறப்புத் திட்டத்தை விவசாயத் தொழிலாளர் சங்கம் வரவேற்கிறது. ஆனால், நடவு இயந்திரம் மூலம் நடவு செய்தால்தான் மானியம் என்ற அறிவிப்பு விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் இடையே பிரச்னையை உண்டாக்குவதால் இதனைத் தவிர்க்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் நடவு இயந்திரத்தை அரசு ஊக்கப் படுத்துவதைக் கைவிட்டு, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க வேண்டும். கை நடவு மூலம் விவசாயத் தொழிலாளர்களை வைத்து நடவு செய்யும் விவசாயிகளுக்கும், அரசு மானியமாக ரூ. 4,000 வழங்கிட வேண்டும்.

நடவு இயந்திரத்துக்கு எதிராகக் குத்தாலம் வட்டம் ஆட்டூர், தரங்கை வட்டம், மேமாத்தூர் ஆகிய கிராமங்களின் விவசாயத் தொழிலாளர்கள் மீதான பொய் வழக்குகளை உடனே திரும்பப் பெற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, ஜூலை 31 -இல் மயிலாடுதுறையில் விவசாயத் தொழிலாளர்கள் கோரிக்கை சிறப்பு மாநாடு நடத்த உள்ளோம் என்றார்.

முன்னதாக,இதுதொடர்பாக திங்கள்கிழமை காலை அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஏ. லாசர், மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமியிடம் மனு அளித்துள்ளார்.

## அதிக மகசூல் தரும் புதிய ரக நெல் விதைகள் அறிமுகம்

வல்லம் வட்டாரத்தில் அதிக மகசூல் தரும் புதிய ரக நெல் விதைகள் அறிமுகம் செய்யப்பபட்டுள்ளது. இந்த நெல் லிதைகள் கிலோ ரூ. 10-க்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

இது குறித்து வல்லம் வேளாண் உதவி இயக்குநர் கே.ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: வல்லம் வட்டாரத்தில் வருடந்தோறும் 25,000 ஏக்கர் பரப்பில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நெல் பயிரில் அதிக மகசூலைப் பெற்றிட வேளாண் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி அதிக மகசூல் தரக்கூடிய ஏ.டி.டி - 49, கோ - 50, கோ - 51 ஆகிய புதிய ரக நெல் விதைகள் தற்போது வேளாண் விரிவாக்க மையங்களில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவை புதிய ரகங்களாக இருப்பதால், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு கிலோ ரூ. 10-க்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நெல் விதைகள் விவசாயி ஒருவருக்கு 2 ஏக்கருக்குத் தேவையான அளவில் வழங்கப்படும். இவை 135 நாள்கள் வயதுடையவை. கோ - 51 ரகம் 105 நாள் வயதுடையது. மூன்று ரகங்களும் பின் சம்பா பட்டத்துக்கு ஏற்றவையாகும். மற்ற சம்பா ரகங்களைக் காட்டிலும் கூடுதல் மகசூல் தரக் கூடியவை.

இது குறித்த விவரங்களுக்கு உதவி வேளாண் அலுவலர்கள் ரவி - 94437 94021, சாவித்திரி - 80563 23920, பிரியா - 97915 39912, சிவசங்கரி - 88704 56138 ஆகியோரை செல்லிடப்பேசியில் தொடர்பு கொண்டு கேட்கலாம். அல்லது வல்லம் வேளாண் விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொண்டும் தகவல்களைப் பெறலாம் என்று அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கெலவரப்பள்ளி அணையில் இருந்து இன்று தண்ணீர் திறப்பு

ஓசூர்: ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து, முதல்போக பாசனத்திற்கு, இன்று (ஜூலை 19) தண்ணீர் திறக்கப்பட உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து ஆண்டுதோறும், முதல்போக பாசனத்துக்கு, ஜூலை மாதத்தில் இருந்து டிசம்பர் வரை, 150 நாட்களுக்கும், அதன் பின்னர் ஜனவரி மாதத்தில் இருந்து மே மாதம் வரை, இரண்டாம் போக பாசனத்திற்கு, 120 நாட்களும், வலது, இடது புற கால்வாயில் வினாடிக்கு, 88 கன அடி நீர் திறந்து விடப்படுவது வழக்கம். இதன்படி, கடந்த ஜனவரியில் இருந்து மே வரை, இரண்டாம் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்நிலையில், முதல் போக பாசனத்திற்கு கடந்த, 15 ம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் இருந்தனர். ஆனால் அரசிடம் இருந்து உத்தரவு வராததால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதற்கிடையே, கெலவரப்பள்ளி அணையில் இருந்து, இன்று (ஜூலை 19) காலை தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளதால், வலது கால்வாயில், 26 கன அடி, இடது கால்வாயில், 62 கன அடி என, மொத்தம் வினாடிக்கு, 88 கன அடி தண்ணீர், முதல்போக பாசனத்திற்கு திறந்து விடப்படுகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அணைக்கு நேற்றைய நிலவரப்படி, 313 கன அடி

தண்ணீர் வரத்து உள்ளது. இதில், 80 கன அடி தென்பெண்ணை ஆற்றில் திறந்து விட்டது போக, மீதமுள்ள தண்ணீர், அணையில் சேமிக்கப்பட்டு வருகிறது. அணையின் மொத்த கொள்ளளவான, 44.28 அடியில், 41 அடி அளவுக்கு தண்ணீர் இருப்பு உள்ளது.

## மானிய விலையில் நெல், பயறு வகை விதைகள்

பவானிசாகர்: பவானிசாகர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையக்கில், ஆடிப்பட்ட சாகுபடி விதைகள் இருப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆடிப்பட்ட சாகுபடிக்கேற்ற ஏ.டி.டி., 49, கோ.ஆர்., 50, கோ.ஆர்., 51, ரக நெல் விதைகள், ஒரு கிலோவிற்கு, பத்து ரூபாய் மானியத்திலும், பாசிப் பயறு, தட்டைப் பயறு உள்ளிட்ட பயறு வகை விதைகள், ஒரு கிலோவிற்கு, 25 ரூபாய் மானியத்திலும், தக்கைப்பூண்டு எனப்படும் பசுந்தாள் உரை விதைகள் 50 சதவீத மானியத்திலும், பவானிசாகர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கும். என, வேளாண்மை உதவி இயக்குனர் உமாபதி தெரிவித்தார்.

## குன்னூரில் தேயிலை ஏலம்; 76 சதவீதம் விற்பனை

குன்னூார் : குன்னூர் தேயிலை ஏலத்தில், 76 சதவீதம் தூள் விற்பனையானது.
குன்னூரில் உள்ள ஏல மையத்தில் விற்பனை எண், 28க்கான ஏலம் நடந்தது. இதில், 15 லட்சத்து 73 ஆயிரம் கிலோ தேயிலை தூள் இடம் பெற்றது. இதில், இலை ரகம், 10 லட்சத்து, 34 ஆயிரம் கிலோ; டஸ்ட் ரகம், 5 லட்சத்து, 39 ஆயிரம் கிலோவும் இருந்தது. ஏலத்தில், 76 சதவீதம் விற்பனையானது.
இதில், உயர்ந்தபட்ச விலையாக, சி.டி.சி., ரகத்துக்கு,191 ரூபாய்; ஆர்த்தோடெக்ஸ் ரகத்துக்கு, 234 ரூபாய் கிடைத்தது. சராசரி விலையாக, சாதாரண வகை இலை ரகம் 80 ரூபாய் முதல், 84 ரூபாய் வரையும்; தரமான தேயிலை தூள், 110 ரூபாயில் இருந்து, 165 ரூபாய் வரையிலும் ஏலம் போனது. 'டஸ்ட்' ரகத்தில் சாதாரண வகை, 84 ரூபாயில் இருந்து, 89 ரூபாய் வரையும்; தரமான தேயிலை தூள், 110 விருந்து, 165 வரையிலும் ஏலம் விடப்பட்டது.

மொத்தம், 11.57 லட்சம் கிலோ விற்பனையான நிலையில், இதன் மதிப்பு,10 கோடியே 81 லட்சம் ரூபாய் ஆகும். கடந்த ஏலத்தை விட, கிலோவுக்கு, 3 ரூபாய் விலை குறைந்தது.

## கோத்தகிரியில் விவசாய பணி ஜரூர் பழநாற்றுக்களின் விற்பனை 'ஜோர்'

கோத்தகிரி: கோத்தகிரியில் மழை பெய்து வரும் நிலையில், விவசாய நிலங்களுக்கு தேவையான, பழநாற்றுகளின் விற்பனை சூடுப்பிடித்துள்ளது.

நீலகிரியில், கடந்த சில நாட்களாக மழைப்பெய்து வருகிறது. இதனால், விவசாய நிலங்களில் ஈரத்தன்மை அதிகரித்துள்ளது. விவசாய நிலங்களில், புதிதாக தேயிலை நாற்றுகள் நடவு செய்வதற்கும், இடை நடவுக்கும் தற்போது, உகந்த கால நிலை நிலவுகிறது.

இந்நிலையில், கோத்தகிரி பஸ் நிலையம், காமராஜர் சதுக்கம் மற்றும் மார்கெட் உள்ளிட்ட பகுதிகளில், கடந்த சில நாட்களாக, பழ நாற்றுகள் விற்கப்பட்டு வருகின்றன. சில்வர் ஓக் ஒரு நாற்றுக்கு, ஐந்து ரூபாயும், மாதுளை, சப்போட்டா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் கருவேப்பிலை நாற்றுகள், 10 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன. குன்னுார் - சிம்ஸ்பார்க், பர்லியார் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, பக்குவப்படுத்தி கொண்டுவரப்படும் உயர் ரக நாற்றுகளை விவசாயிகள் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

நாற்று விற்பனை செய்யும் குன்னுார் சிம்ஸ்பார்க் பகுதியை சேர்ந்த சிவக்குமார் கூறுகையில், “மழைப் பெய்துவருவதால், விவசாயிகள் பழ நாற்றுகளை விரும்பி வாங்கிச் செல்கின்றனர். விவசாயிகள் அல்லாதவர்களும் தங்களது வீட்டருகே பழ மரங்களை வளர்க்க விரும்புகின்றனர். "இதனால், ஒரு நாளுக்கு, 200 முதல், 300 நாற்றுகள் விற்பனையாகிறது. தேயிலைக்கு ஊடு பயிராக பழ மரங்களை வளர்ப்பதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. இதற்கு தோட்டக்கலைத்துறையும் ஊக்குவிப்பு அளிக்க வேண்டும்,” என்றார்.

## இயற்கை உணவால் நோயை விரட்டலாம்-'தினமலர்' பயிற்சியில் ஆலோசனை

திண்டுக்கல்: 'இயற்கை உணவை உண்டால் நோயை விரட்டலாம். வீட்டிலேயே கீரைகளை பயிரிட்டும் பயன் பெறலாம்' என, தினமலர் - கனரா வங்கி சார்பில் நடந்த பெண்களுக்கான இலவச பயிற்சியில் ஆலோசனை வழங்கப்பட்டது.

திண்டுக்கல்லில் தினமலர் நாளிதழ் மற்றும் கனரா வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம் இணைந்து இயற்கை வேளாண்மை மற்றும் உணவு குறித்து பெண்களுக்கு இலவச பயிற்சியை வழங்கின. பயிற்சி நிலைய இயக்குனர் எம்.முருகராஜ் முன்னிலை வகித்தார். பயிற்றுனர் எஸ்.சாலமோன்ராஜ் பங்கேற்றார்.

'கீர்' வகைகளின் பயன

இயற்கை உணவியல் மருத்துவர் மாறன் பேசியதாவது:

நாகரிக உணவால் நமது ஆரோக்கியம் தொலைந்து போய்விட்டது. பாரம்பரிய உணவுகளையே நாம் உட்கொள்ள வேண்டும். 'கறிவேப்பிலை கீர்' சாப்பிட்டால் முடிஉதிர்வதை தவிர்க்கலாம். கண் குளிர்ச்சிக்கு 'கேரட் கீர்' சாப்பிடலாம். ரத்த சோகையை விரட்ட 'பீட்ரூட் கீர்' குடிக்க வேண்டும்.

கிட்னி தொந்தரவு, கல் அடைப்பிற்கு யானை நெருஞ்சி சாறு குடிக்கலாம். துளசி, கொத்தமல்லி, ஓமவல்லி, இஞ்சி ஆகியவற்றை வீட்டில் வளர்த்து மூலிகை டீ குடிக்கலாம். முளை கட்டிய தானியங்களை உண்டால் புரதச் சத்து கிடைக்கிறது. உடனடியாக ஜீரணமும் ஆகிறது.

கம்பு, கேழ்வரகு, வெந்தயம், பாசிப்பயிறு, சோளம், கோதுமை ஆகியவற்றை முளை கட்டிய பின்பு உண்டால் ஆரோக்கியம் கூடும். மூட்டுவலிக்கு உளுந்தம் கழி, கொழுப்பை குறைக்க கொள்ளுப்பால், இளைத்த உடலுக்கு எள்ளுப் பால், பெண்களுக்கு மாதவிடாய் பிரச்னைகளை தீர்க்க புளியை தவிர்த்து எலுமிச்சம் பழத்தை பயன்படுத்த வேண்டும். உணவு சாப்பிடுவதை ஒரு தியானமாக செய்ய வேண்டும் என, ரமணமகரிஷி கூறியுள்ளார், என்றார்.

இயற்கை உரம்தயாரிப்பு

இயற்கை விவசாயம் குறித்து முத்துமணிகண்டன் கூறியதாவது: வீட்டில் துளசி, ஓமவல்லி, கறிவேப்பிலை உட்பட பல மூலிகைச் செடிகளை பயிரிடலாம். இதற்கு தேவையான இயற்கை உரங்களை நாமே தயாரிக்கலாம். தோட்டத்தில் உள்ள இலைதளை குப்பையை 5 மடங்கு, அதில் 2 பங்கு நாட்டுப்பசுவின் சாணம், செம்மண் 2 பங்கு இட்டு கலக்க வேண்டும்.

2 நாட்கள் வெயிலில் உலர விட்டால் நுண்ணுயிர்கள் வளர துவங்கும். விதைகளை 'பஞ்சகவி'யில் நனைத்து நட வேண்டும். இயற்கை விதைகளை பயன்படுத்த வேண்டும். 100 மில்லி கோமியம், 100 கிராம் சாணம், சுண்ணாம்பு 3 கிராம், 2 லிட்டர் தண்ணீர் கலந்து விதை தூவிய இடங்களில் இட வேண்டும். நல்ல ஆரோக்கியமான காய்கறிகள், பூக்கள், பழங்கள், கீரைகள், மூலிகை செடிகள் நமக்கு கிடைக்கும், என்றார்.

## மானாவாரி கம்பு விதைப்பு துவக்கம்

தியாகதுருகம்: தியாகதுருகம் பகுதியில் மானாவாரி கம்பு விதைப்பு பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர்.

தியாகதுருகம் பகுதியில் மானாவாரி நிலங்கள் 7 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கம்பு பயிரிடப்படுகிறது. சிறு தானியங்களில் முதன்மையான கம்பு உணவுகளை, சமீப காலமாக பொதுமக்கள் விரும்பி உண்கின்றனர்.

குறிப்பாக கம்பு கூழ் உடலுக்கு ஆரோக்கியத்தை கொடுப்பதால் இதை விற்பனை செய்யும் கடைகளில் கூட்டம் அலைமோதுகின்றது.

விவசாயிகளின் வீடுகளுக்கே சென்று வியாபாரிகள் வாங்கிக் கொள்வதால் கம்புக்கு நல்ல விலை கிடைக்கிறது.

ஆடி பட்டத்தில் விதைக்கப்படும் கம்பு பயிர்கள் 3 மாதத்தில் விளைந்து பலன் தருகிறது. இதற்காக கடந்த மாதம் பெய்த மழை ஈரத்தை பயன்படுத்தி நிலத்தை உழுது களைகளை அகற்றி சீர்படுத்தி வைத்திருந்தனர்.

தற்போது தென்மேற்கு பருவமழை சீராக பெய்து வருவதால் போதிய ஈரப்பதம் உள்ளதாலும், தகுந்த பருவம் என்பதாலும் தற்போது, கம்பு விதைப்பு பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சாண எருவை வயலில் துாவி அதன் பின் கம்பு விதைக்கின்றனர். அதிக பராமரிப்பு இன்றி குறுகிய காலத்தில் நல்ல பலன் தரும் பயிராக உள்ளதால் கம்பு சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.

மழை தொடர்ந்து கைகொடுத்தால் மகசூல் அதிகரிக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## திண்டிவனத்தில் பலத்த மழை

திண்டிவனம்: திண்டிவனத்தில் நேற்று மாலை பலத்த மழை பெய்ததால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.
தமிழகம் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக, வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

இதன் காரணமாக, நேற்று மாலை சு:00 மணியிலிருந்து திண்டிவனம் மற்றும் சுற்று வட்டார பகுதியில், மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

திண்டிவனம் பகுதியில், தொடர்ந்து ஒரு மணிநேரம் மழை பெய்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்தது.

## கல்வராயன்மலை விவசாயிகள்... ஆர்வம்! எலுமிச்சை புல் 'சாகுபடி' அதிகரிப்பு

கச்சிராயபாளையம்: கல்வராயன் மலை பகுதியில் எலுமிச்சை புல், செழித்து வளர்ந்துள்ளது. குறைந்த செலவில் லாபம் கிடைப்பதால் இதனை சாகுபடி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கல்வராயன் மலை பகுதியில் மரவள்ளி கிழங்கு, வரகு, சாமை, தினை போன்ற தானிய பயிர்களும், தக்காளி, பீன்ஸ், முட்டைகோஸ், முள்ளங்கி, கத்திரி போன்ற காய்கறி பயிர்களும், சாகுபடி செய்து வருகின்றனர்.
தற்போது கல்வராயன் மலை பகுதியில் மாற்று பயிராக எலுமிச்சை புல் சாகுபடி செய்வதில், இப்பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
குறைந்த செலவில் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகளிடையே வரவேற்பை பெற்றுள்ளது. நறுமணப்பயிரான எலுமிச்சை புல், கற்பூர பல், கற்பூர சிங்கி, வாசனை புல் என பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. வெப்ப மண்டல பகுதிகளில் அதிகளவில் வளரும் தன்மை கொண்ட இது, சிறந்த மருத்துவ குணம் கொண்டது. ஜீரண கோளாறுகளை நீக்கும் தன்மை கொண்டது. இது உணவு பொருட்கள் தயாரிப்பிலும், லெமன் டீ தயாரிப்பிலும் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

இதிலிருந்து பெறப்படும் எண்ணெய் சோப்பு பவுடர்கள், பாத்திரம் துலக்கும் பவுடர், புளோர் கிளீனர் மற்றும் வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு, முக்கிய மூலப்பொருளாக பயன்படுகிறது.

இதில் அதிகளவில் எலுமிச்சை மணம் இருப்பதால் ஆயுர்வேத மருத்துவத்தில் குறிப்பாக சுரக்கவும், தோல் நோய்களை நீக்கவும், வலி நிவாரணியாகவும் பயன்படுகிறது.

மேலும் சிறந்த கிருமி நாசினியாகவும், பூச்சிகொல்லியாகவும் பயன்படுகிறது.

எண்ணெய் எடுத்த பின் எஞ்சிய புல் மாட்டு தீவனமாகவும், காகிதம் மற்றும் அட்டை பெட்டிகள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது.
இதனால் நாளுக்குநாள் கற்பூர புல்லின் பயன்பாடுகள் அதிகரித்து வருகிறது.

கார அமில தன்மை கொண்ட நிலத்திலும் லெமன் கிராஸ் செழித்து வளர்வதாலும், மழை நீர் மற்றும் காற்றில் உள்ள ஈரபதத்தை கொண்டு வளரும் தன்மை கொண்டதால், நீர் தேவை மிகவும் குறைவு. மலை பகுதியில் சாகுபடி செய்வதற்கு மிகவும் ஏற்ற பயிராக லெமன் கிராஸ் உள்ளது.

ஜூன், ஜூலை மாதங்கள், லெமன் கிராஸ் நடவு செய்ய ஏற்ற பருவம். இது 2 மீட்டர் உயரம் வரை வளரும் தன்மை கொண்டது.

ஒரு ெஹக்டேர் சாகுபடி செய்ய 55, 500 வேர்கட்டைகள் தேவைப்படும். ஒரு ெஹக்டேருக்கு நடவு செய்ய தேவையான வேர்கட்டைகளை 4 கிலோ விதைகள் மூலம் உற்பத்தி செய்யலாம். 7-15 நாட்கள் இடைவெளியில் நீர் பாய்ச்சினால் போதுமானது.
இந்த பயிரில் அதிகளவில் எலுமிச்சை மனம் வீசுதால் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைவாக உள்ளது. உர மேலாண்மையும் மிகவும் குறைவு.

நடவு செய்த 90 வது நாளில் முதல் அறுவடையும், அதன் பின்னர் 75-90 வது நாளில் 2 வது அறுவடைக்கும் தயாராகிறது. புல்லினை தரையிலிருந்து 15 செ.மீ., விட்டு அறுவடை செய்யப்படுகிறது. ெஹக்டேருக்கு 20-30 டன் வரை புல் மகசூல் கிடைக்கிறது.

இதன் மூலம் முதல் ஆண்டில் 25 கிலோ எண்ணெயும், 2 ம் ஆண்டில் 85-100 கிலோ எண்ணெயும் கிடைப்பதால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கிறது.

எலுமிச்சை புல் மலை பகுதியில் சாகுபடி செய்ய ஏற்ற பயிராக உள்ளதாலும், நீர் தேவை குறைவதாலும், குறைந்த செலவில் அதிக
லாபம் கிடைப்பதாலும் கல்வராயன் மலை பகுதியில் உள்ள விவசாயிகள் தற்போது மாற்று
பயிராக உள்ள எலுமிச்சை புல் ( லெமன் கிராஸ் ) சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

## மானிய விலையில் களைக்கொல்லி: மானாவாரி விவசாயிகள் எதிர்பார்ப்பு

குளித்தலை: குளித்தலை பகுதியில், மானிய விலையில் களைக்கொல்லி வழங்க, மானாவாரி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரூர் மாவட்டம், குளித்தலை அடுத்த மருதூர், பரளி, மேட்டுமருதூர், கூடலூர், கருங்களாப்பள்ளி, கல்லுப்பட்டி, கணக்கப்பிள்ளையூர், குமாரமங்களம், பணிக்கம்பட்டி, நங்கவரம், பொய்யமணி, நச்சலூர் உள்ளிட்ட பகுதிகளில், விளைநிலங்களில் தண்ணீர் சப்ளை இல்லாததால், கோடை சாகுபடி செய்யமுடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிலத்தில், கோரை பயிர்கள் கூட விவசாயம் செய்யமுடியாத நிலையில் விளைநிலங்கள் உள்ளன. தற்போது, ஆடிப்பட்டம் சாகுபடி செய்வதற்கு நிலத்தை தயார் செய்ய வேண்டுமென்றால், அதிகளவு செலவிடவேண்டியுள்ளது. வேளாண்மை துறை சார்பில், நெல் சாகுபடி செய்யப்படும் விளை நிலத்தில் களையை அழிக்க, மானிய விலையில் களைக்கொல்லி வழங்குவது போல், மானாவாரி பகுதிக்கும் வழங்கவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சிவப்பு சோளம் விளைச்சல் மழையால் அறுவடை பாதிப்பு

கிருஷ்ணராயபுரம்: கட்டளை பகுதியில், அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள சிவப்பு சோளம் விளைச்சல் இருந்தும், மழையால் அறுவடை செய்ய முடியாமல், விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கட்டளை, வீராக்கியம், ரங்கநாதபுரம், ஆர்.புதுகோட்டை, மணவாசி உள்ளிட்ட பகுதிகளில், 300க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில், சிவப்பு சோளம் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, சிவப்பு சோளம் நன்றாக விளைச்சல் கண்டுள்ளதால், விவசாயிகள் சிவப்பு சோளம் அறுவடை செய்யும் பணியில், தீவிரம் காட்டி வருகின்றனர். இருந்தும், தற்போது பருவமழை விட்டு விட்டு பெய்வதால், விவசாயிகள் சோளத்தை அறுவடை செய்ய முடியாமல் தவிக்கின்றனர். வரும் நாட்களில், மழை

பெய்வது குறைந்தால், அறுவடை பணிகள் துவங்கப்படும் என்று, விவசாயிகள் தெரிவித்தனர்.

## இயந்திரத்தில் நடவு செய்வதில்... சிக்கல்நாற்றுகள் 20 நாட்களுக்கு மேலானதால்

கம்பம்: கம்பம் பள்ளத்தாக்கில் இயந்திர நடவு முறையில் 16 நாட்களுக்கு மேல் வளர்ந்த நாற்றுக்களை நடவு செய்ய முடியாமல் விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

கடந்த 2006 முதல் 2011 வரை தி.மு.க., ஆட்சியில் நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் திருந்திய நெல் சாகுபடி முறை அமல்படுத்தப்பட்டது. இந்த முறையில் விவசாயிகள் நெல் நடவு செய்தால், கூடுதல் மகசூல் கிடைக்கும். ஆனால் பெரும்பாலான விவசாயிகள் இந்த முறையை பின்பற்ற வில்லை.காரணம் நடவிற்கு கூடுதல் தொழிலாளர்கள் தேவைப்படுவார்கள். இடைவெளி விட்டு ஒரே நேர்கோட்டில் நடவு செய்ய வேண்டும். கூடுதல் நேரம் செலவாகும். எனவே பெரும்பாலான விவசாயிகள் இதை விரும்பவில்லை.

இந்நிலையில் இயந்திர நடவு முறையை தற்போது விவசாயத்துறை வலியுறுத்தி வருகிறது. இதனால் திருந்திய நெல் சாகுபடி முறையை வேளாண் துறை கைவிட்டுள்ளது. விவசாயிகள் கூறுகையில், 'திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்ற வேளாண் அதிகாரிகள் தான் கடந்த காலங்களில் வலியுறுத்தினர்.

இப்போது இயந்திர நடவு முறையை பின்பற்ற வலியுறுத்தி வருகின்றனர். நடவிற்கு தொழிலாளர்கள் கிடைப்பது சிக்கலாக இருப்பதால் இயந்திர நடவு முறை ஏற்றது தான். ஆனால் இயந்திர நடவு முறையில் 14 நாட்கள் முதல் 16 நாட்கள் வளர்ந்த நாற்றுக்கள் மட்டுமே நடவு செய்ய முடியும்.

கம்பம் பகுதியில் தற்போது நாற்றாங்கால் வளர்த்துள்ளவர்கள் அனைவரும் 20 நாட்களுக்கு மேல் நாற்றுக்களை வளர்த்துள்ளார்கள். 16 நாட்களுக்கு மேல் வளர்ந்த நாற்றுக்களை நடவு செய்தால் இயந்திரம் நாற்றுக்களை சேதமாக்கி விடும்.

ஆனால் 20 நாட்களுக்கு மேல் வளர்த்த நாற்றுக்களையும் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்யலாம். இது தொடர்பாக வேளாண் அதிகாரிகள் விளக்க மறுக்கின்றனர்' என்கின்றனர்.

வேளாண் அதிகாரிகள் கூறுகையில், "திருந்திய நெல் சாகுபடி முறையை விட இயந்திர நடவு முறை நல்லது. எனவே இதை வலியுறுத்துகிறோம். தொழிலாளர் பற்றாக்குறை இருப்பதாலும், அதிக மகசூல் கிடைக்கும் என்பதாலும் இயந்திர நடவு முறையை பின்பற்ற வலியுறுத்துகிறோம். இரண்டு முறைகளும் ஏறக்குறைய ஒன்றுதான்.
திருந்திய நெல் சாகுபடி முறைக்கு தந்த மானியத்தை இயந்திர நடவிற்கும் தருகிறோம். மாவட்டத்திற்கு இரு போகத்திற்கும் சேர்த்து ஆயிரத்து 600 எக்டருக்கு மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது' என்றனர்.

## மேட்டூர் அணை நீர்வரத்து சரிவு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 10,495 கனஅடியாக சரிந்தது. கர்நாடகா அணைகளில் திறக்கப்பட்ட நீர், மேட்டூர் அணைக்கு வந்துகொண்டிருக்கும் நிலையில், நேற்று முன்தினம், 13 ஆயிரத்து, 435 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று, 10 ஆயிரத்து, 495 கனஅடியாக சரிந்தது. நேற்று அணை நீர்மட்டம், 51.90 அடியாகவும், நீர்இருப்பு, 19.02 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. கபினி அணை நிரம்பும்பட்சத்தில் மேட்டூர் அணைக்கு கூடுதல் நீர் திறக்கப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## வரும் 22ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

அஸ்தம்பட்டி: மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஜுலை, 22ம் தேதி நடக்கிறது. இதுகுறித்து, கலெக்டர் சம்பத் கூறியிருப்பதாவது: ஜுலைக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 22ம் தேதி காலை, 10.30 மணிக்கு நடைபெறும். கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கும் கூட்டத்தில், விவசாயிகள் கலந்துகொண்டு, வேளாண் சம்பந்தமான குறைகளை, நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## ரூ.43 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்குட்பட்ட அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி வளாகத்தில் ,நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில், 60 கிலோ கொண்ட, 1,566 சுரபி ரக பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன. குறைந்தபட்சம், 6,632 ரூபாய், அதிகபட்சம், 7,292 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 43 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## நாட்டுக்கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவம் குறித்த பயிற்சி

நாமக்கல்: 'வரும், 27ம் தேதி, நாட்டுக்கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவத்தின் முக்கியத்துவம் என்ற தலைப்பில், ஒருநாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது' என, தலைவர் கோபால கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் - திருச்சி சாலை, கால்நடை மருத்துவமனை வளாகத்தில், கோழிகளுக்கான மரபு சார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையம் அமைந்துள்ளது. இங்கு, பண்ணையாளர்களுக்கான, 'நாட்டுக்கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவத்தின் முக்கியத்துவம்' என்ற தலைப்பில், வரும், 27 ம் தேதி, மதியம், 1.30 மணிக்கு, ஒருநாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. விருப்பம் உள்ளவர்கள், 04286 - 233 230 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஆரஞ்சு பழத் தோலில் கொசுவத்தி தயாரிப்பு - விஞ்ஞானி தகவல்

தேவகோட்டை: ஆரஞ்சு பழத்தோலில் கொசுவத்தி தயாரிக்க உள்ளதாக, சிங்கப்பூர் விஞ்ஞானி தெரிவித்தார்.

தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில் அறிவியல் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. தலைமையாசிரியர் சொக்கலிங்கம் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் சந்திரமோகன் முன்னிலை வகித்தார். ஆசிரியை கலாவல்லி வரவேற்றார்.

மாணவர்களிடையே சிங்கப்பூர் விஞ்ஞானி சுவாமிநாதன் பேசுகையில், உலகில் பல ஆயிரம் டன் கழிவு பொருட்கள் வீணாகிறது. அதில் பெரும்பகுதி பழங்களின் கழிவு தான். ஆரஞ்சு பழத்தோலில் வைட்டமின் 'ஏ' அதிகம் உள்ளது.

அந்த காலத்தில் ஆரஞ்சு பழத்தோலை வெயிலில் காயவைத்து ,நச்சுத்தன்மை நீங்கியவுடன் பொடியாக்கி பலவற்றுக்கும் பயன்படுத்துவர். தற்போது ஆரஞ்சு பழத்தோலில் இருந்து கெமிக்கல் கலக்காத கொசுவத்தி உட்பட சில பொருட்களை தயாரித்து வருகிறோம். அந்த ஆய்வு முடியும் தருவாயில் உள்ளது.

100 சதவிகித கழிவுகளையும் வீணாக்காமல் மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்பதே குறிக்கோள் அது தொடர்பாக தொடர்ந்து ஆராய்ச்சி செய்வோம், என பேசினார்.

**தொடரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், ஆடி மாத பிறப்புக்கு முன் தினம் முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. இதையடுத்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகள், ஆடிபட்ட சாகுபடிக்காக தங்களது நிலத்தை உழுது தயார் படுத்தி வந்தனர். குறிப்பாக ஆடி பெருக்கான, ஆடி, 18ம் தேதி பயிர் சாகுபடிக்கு தேவையான உழவு உள்ளிட்ட பணிகளில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில், தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, நேற்று மாலை, 5.20 மணியில் இருந்து, 6.45 மணிக்கு மேல் தொடர் மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**தொடரும் மழையால் கம்பு அறுவடை தீவிரம்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பருவ மழை தொடர்வதை அடுத்து, கம்பு அறுவடையில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி மாவட்டக்தில், மானாவாரி மற்றும் இறவை பயிராக அதிகளவில் கேழ்வரகு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும், சாமை, சோளம், கம்பு உள்ளிட்ட பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தர்மபுரி, பென்னாகரம், அரூர் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், 500 ஹெக்டேருக்கு மேல் கம்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு மாவட்டத்தில் நடவு செய்யப்பட்ட கம்பு, போதிய பருவ நிலை காரணமாக நன்றாக விளைந்து அறுவடைக்கு தயாராகியுள்ளது. இந்நிலையில், மாவட்டத்தின் பல பகுதிகளில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையால், அறுவடைக்கு தயாராகியுள்ள கம்பு பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், கதிரிலே,

முளைக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, சாகுபடி செய்துள்ள விவசாயிகள், கம்பை அறுவடை செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## அரூர், பாப்பிரெட்டிப்பட்டியில் மழை

அரூர்: அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் நேற்று மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டம், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில், நேற்று மதியம், மூன்று மணி முதல் விட்டு, விட்டு மழை பெய்தது. இரவு வரை பெய்த மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கியது. தாழ்வான பகுதிகளில் மழை நீர் வெள்ளம் போல் ஓடியது. தற்போது ஆடி மாதம் துவங்கியுள்ள நிலையில், புதிதாக பயிர் செய்ய விவசாயிகள் நிலங்களை உழுது தயார் செய்து வைத்திருந்தனர். இதனால் வரும் நாட்களில் விவசாய பணிகள் தீவிரமடையும். தற்போது பெய்த மழையால், மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள், கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கரும்பு விவசாயிகள் ஆலோசனை கூட்டம்

திருவெண்ணெய்நல்லூர், : திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2014-15ம் ஆண்டு மற்றும் 2015-16ம் ஆண்டு கரும்பு விவசாயிகளுக்கு சேரவேண்டிய பாக்கி தொகை ரூ.77 கோடியை உடனடியாக வழங்க வேண்டும். நீதிமன்ற உத்தரவுபடி 2004-05 மற்றும் 2008-09ம் ஆண்டின் லாபத்தில் பங்கு தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி செல்கல்வ

ராயன் சர்க்கரை ஆலையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

ஆலை தலைவர் கொடியான் தலைமை தாங்கினார். செயலாளர் ஜோதிராமன் வரவேற்றார். மாநில துணை செயலாளர்கள் ஜனார்த்தனன், சீனுவாசன். பொருளாளர் சின்னப்பா ஆகியோர் பேசினர். அனைத்து விவசாயிகள் அஞ்சல் அலுவலகத்துக்கு திரளாக சென்று முதல்வருக்கு நிலுவை தொகையை வழங்கக்கோரி கோரிக்கை மனு அனுப்பினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் 22ம் தேதி நடக்கிறது

நாமக்கல் : நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் 22ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. இதுகுறித்து நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாமக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் 22ம் தேதி காலை 10.30 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. இதில், விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று பல்வேறு தகவல்களை தெரிந்து கொள்ளலாம். விவசாயம் தொடர்பான குறைகள் ஏதேனும் இருப்பின், அவற்றைத் தெரிவித்து உடனடியாக நிவர்த்தி செய்துகொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அக்கரைப்பட்டியில் 1,566 பருத்தி மூட்டைகள் ரூ.43 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம் : வெண்ணந்தூர் அடுத்த அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கியில் நடந்த ஏலத்தில், 1566 பருத்தி மூட்டைகள் ரூ.43 லட்சத்துக்கு ஏலம் போனது. ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு உட்பட்ட அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி வளாகத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில் அக்கரைப்பட்டி, மதியம்பட்டி, பொரசல்பட்டி உள்ளிட்ட சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், 60 கிலோ கொண்ட 1,566 சுரபி ரக பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.

இந்த ரகங்கள் குறைந்தபட்ச விலையாக ரூ.6,632க்கும், அதிகபட்சம் ரூ. 7,292க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.43 லட்சத்துக்கு விற்பனையானது. இதில், திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் ஆகிய பகுதிகளிலிருந்து

50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பருத்தி மூட்டைகளை ஏலம் எடுத்தனர்.

## தஞ்சையில் இருந்து விழுப்புரத்திற்கு 1200 டன் அரிசி

தஞ்சை,: தஞ்சையில் இருந்து விழுப்புரத்திற்கு பொது விநியோக திட்டத்திற்காக 1200 டன் அரிசி நேற்று ரயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.பொதுவிநியோக திட்டத்திற்காக தஞ்சை மாவட்டத்தில் உள்ள நுகர்பொருள் வாணிபக்கழக குடோன்களில் இருந்து பிற மாவட்டங்களுக்கு ரயில் வாயிலாக அரிசிகள் அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

இதன்படி நேற்று விழுப்புரம் மாவட்டத்திற்கு 1200 டன் அரிசி 24 ரயில் வேகன்களில் அனுப்பிவைக்கப்பட்டது.

## புதிய பயிர் காப்பீட்டு திட்டம் விவசாயிகளுக்கு பயனளிக்கும் அமைச்சர் பேச்சு

வேதாரண்யம் : புதிய பயிர் காப்பீட்டு திட்டம் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று அமைச்சர் ஓ.எஸ்.மணியன் பேசினார். வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் செம்போடை, தேத்தாகுடி வடக்கு, தேத்தாகுடி தெற்கு, புஷ்பவனம், பெரிய குத்தகை ஆகிய ஊராட்சிகளில் குறைதீர் முகாம் நடந்தது. இதில் பொதுமக்களிடமிருந்து கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஓ.எஸ்.மணியன் மனுக்களை பெற்று கொண்டார்.

பின்னர் அவர் பேசியதாவது: புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தில் விதைப்பு பொய்த்தல், நடவு செய்ய இயலாதநிலை, விதைப்பு முதல் அறுவடை காலம் வரை ஏற்படும் அனைத்து வகையான பாதிப்புகளுக்கும் இழப்பீடு பெற முடியும். இத்திட்டத்துக்கு ரூ.500 கோடியை தமிழக அரசு மானியமாக வழங்குகிறது என்றார்.இதைதொடர்ந்து ஜெகதாம்பாள் என்ற மாற்றுத்திறனாளிக்கு மூன்று சக்கர வாகனம் வழங்க சமூக நலத்துறைக்கு பரிந்துரை செய்தார்.

நாகை எம்பி கோபால், தாசில்தார் இளங்கோவன், ஒன்றியக்குழு தலைவர் சுசீலாதேவி சரவணன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் சண்முகராஜ்,

ரவிச்சந்திரன், ராஜகுமாரி அய்யப்பன், ஒன்றிய செயலாளர் கிரிதரன், நகர செயலாளர் எழிலரசு மற்றும் பலர் பங்கேற்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சிறுதானியங்களின் மீது மக்களின் கவனம் திரும்பி உள்ளது கலெக்டர் நடராஜன் பேச்சு



ராமநாதபுரம்,

தவறான உணவு பழக்க வழக்கங்களினால் அதிகரித்து வரும் நோய் பாதிப்புகளில் இருந்து மீள சிறுதானியங்களின் மீது மக்களின் கவனம் திரும்பி உள்ளதாக விதை திருவிழாவில் கலெக்டர் நடராஜன் பேசினார்.

**விதை திருவிழா**

ராமநாதபுரம் அருகே எட்டிவயல் கிராமத்தில் உள்ள இயற்கை விவசாய பண்ணையில் விதைத்திருவிழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் நடராஜன் தலைமை தாங்கினார். முன்னோடி இயற்கை விவசாயி தரணி முருகேசன் வரவேற்று பேசினார். சிறுதானிய சாகுபடி நுட்பங்கள் குறித்து திருவண்ணாமலை சிறுதானிய மகத்துவ மைய பேராசிரியர் நிர்மலகுமாரி, மதிப்பு கூட்டும் முறைகள் குறித்து தமிழ்நாடு வேளாண்மை மனையியல் துறை பேராசிரியர் சரஸ்வதி, விற்பனை வாய்ப்பு குறித்து முன்னோடி சிறுதானிய விவசாயியான ஓய்வு பெற்ற நீதிபதி சடையாண்டி ஆகியோர் பேசினர்.

விழாவில், மாவட்ட கலெக்டர் நடராஜன் பேசியதாவது:– ராமநாதபுரம் மாவட்டத்தில் பயிர் சாகுபடி வடகிழக்கு பருவமழையை நம்பி சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் மானாவாரி பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் நிகர சாகுபடி பரப்பு ஒரு லட்சத்து 98,818 எக்டேர் ஆகும். இதில் சிறுதானிய பயிர்கள் மட்டும் 6,480 எக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது.

இதில் சோளம் 3,884 எக்டேரிலும், கம்பு 670 எக்டேரிலும், கேழ்வரகு 617 எக்டேரிலும், வரகு 12 எக்டேரிலும், மக்காச்சோளம் 936 எக்டேரிலும், குதிரைவாலி 361 எக்டேரிலும் சாகுபடி செய்யப்படுகிறது. சிறுதானிய பயிர்கள் குறைவான நீரை பயன்படுத்தி விளைச்சல் தரக்கூடியது. எனவே, மானாவாரி பயிர்களுக்கும் வளம்குறைந்த நிலங்களுக்கும் தரிசு நிலங்களுக்கும் ஏற்றது.

**நல்லவிளைச்சல்**

தற்போது நல்ல விளைச்சல் மற்றும் விலை கிடைப்பதால் அதிகளவில் சிறுதானியங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. நடப்பு ஆண்டில் சிறுதானிய பயிர்கள் சாகுபடிக்காக வேளாண்மை விரிவாக்க மையங்களில் தேவையான விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அதன்படி கேழ்வரகு ஆயிரத்து 700 கிலோ, குதிரைவாலி 1,200 கிலோ, சாமை 1,036 கிலோ, வரகு 1,757 கிலோ, கம்பு 100 கிலோ என மொத்தம் 5,793 கிலோ விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

சிறுதானிய பயிர்கள் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சிறுதானிய விதைகள் கிலோவிற்கு ரூ.15 மானியத்தில் வினியோகம் செய்யப்பட உள்ளது. மேலும், 100 எக்டரில் சிறுதானிய தொகுப்பு செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட உள்ளன. சிறுதானிய நுண்ணுரங்கள் 200 எக்டருக்கு வழங்கப்படும். சிறுதானிய பயிர்களின் உற்பத்தி மற்றும் விலைபொருள் மதிப்பு கூட்டுதல் தொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சியும் நடத்தப்படும். தற்போது இடுபொருட்கள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

**ரசாயன உரங்கள்**

ரசாயன உரங்கள் பயன்படுத்துவதால் மண்ணின் தன்மை மாறிவிடுகிறது. காலப்போக்கில் அந்த மண் நச்சுத்தன்மையாகி விடுகிறது. அதில் விளையும் பொருட்களை உட்கொள்வதால் மனிதர்களுக்கும் நச்சுத்தன்மை ஏற்பட்டு அனைவருக்கும் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், கொழுப்புசத்து போன்ற வியாதிகள் ஏற்பட்டு வருகிறது. துரித உணவுகளை தவிர்த்து இயற்கையான உணவுக்கு மாறுவதுதான் இதற்கு ஒரே மருந்து. உணவு பழக்க வழக்க மாற்றத்தினால் அதிகரித்து வரும் நோய் பாதிப்புகளில் இருந்து காத்துக்கொள்ள மக்களின் கவனம் தற்போது சிறுதானியங்களின் மீது திரும்பி உள்ளது இதன்காரணமாக சிறுதானியங்களுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இவ்வாறு பேசினார். நிகழ்ச்சியில், கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இயற்கை விவசாய விதைகளை இலவசமாக கலெக்டர் நடராஜன் வழங்கினார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் விவசாயம் வெள்ளைச்சாமி, உதவி அலுவலர் அம்பேத்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.